TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

UNDER SECTION 173 BNSS

(Under Section 154 Cr.P.C.) – (~~குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்~~)

C 8129332

1. District : மாவட்டம் Madurai PS: காவல்நிலையம் V K Al Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 05/2025 Date: நாள் 16/5/2025

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Prevention of Compton (Amended) Act 2018 Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amended) Act 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 15-05-2025

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை Before 16:05 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.05.2025 Time நேரம் 13:00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.05.2025 Time : நேரம் 14:00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 3 km, Southwest.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o the Assistant Director Geological sub-division Groundwater division (WRD) Hqrs

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் Rd, Chinnocho kkikkulam Madurai

6. Complainant /Informant (a) Name: குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P.M. Rajagopal Pandian (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Manickavel

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 18-03-1976 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் Inspector of Police (g) Address : முகவரி Vigilance & Anticorruption Madurai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) R. Kamalakannan 49/25 S/o Raju Assistant director, Water Resources department, Geological sub-division, Madurai
2) N. Arunachalam 41/25 S/o Nagarajan, Assistant Geologist, WRD, Geological sub division, Madurai

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Sir,
In this regard Separate Printed Sheets Pages 3 to 10 are enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16/5/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

16/05/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

16/05/2025 at 14:45 hrs

Name: பெயர் R. Rajesh PRAS IPS
Rank: நிலை Inspector of Police No. எண்
Vigilance & Anti-corruption Madurai

Honoured Sir,

Submitted,

இன்று 16.05.2025-ம் தேதியன்று காவல் ஆய்வாளர் P.M.ரமேஷ் பிரபு ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் துணை ஆய்வுக்குழு ஆய்வாளர், திரு.K.இப்ராஹிம் சேட் அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் 13.00 மணிக்கு ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை. அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, காவல் கூடுதல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை மாவட்டம், நீர்வளத் துறை, உதவி இயக்குநர் (நிலவியல்) அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை 15.05.2025 - 14.05 மணி முதல் 20.00 மணி வரை, திடீர் இணை ஆய்வின் போது நீர்வளத் துறை, உதவி இயக்குநர் (நிலவியல்) அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,02,160/-, கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஆவணம் மற்றும் நீர்வளத் துறை, உதவி இயக்குநர் (நிலவியல்) அலுவலகத்தில் அலுவலில் இருந்த ஐந்து அலுவலர்களான திரு.கமலகண்ணன், திரு.ஞானகரன், திரு.அருணாச்சலம், திருமதி.செல்வி, செல்வி.மீனாபார்வதி ஆகியோரது வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.K.இப்ராஹிம் சேட், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், பழைய இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகம், மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 32/2025/ஐ1, நாள் : 16.05.2025 அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - நீர்வளத்துறை - மதுரை, தல்லாகுளம், நீர்வளத் துறை, நிலவியல் உபகோட்டம் அலுவலகத்தில் உதவி இயக்குநர் (நிலவியல்) திரு. R. கமலக்கண்ணன் அவர்கள் வாட்டர் பிளாண்ட்களை ஆய்வு செய்த பின்பு கமிஷனாக லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் நேற்று 15.05.2025-ம் தேதி திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.1,02,160/- பணம் கைப்பற்றப்பட்டது - தனி அறிக்கை அனுப்புதல் - - மேல் நடவடிக்கை எடுக்க கோருதல் குறித்து. நேற்று 15.05.2025-ம் தேதியன்று, மதுரை, தல்லாகுளம், நீர்வளத் துறை, நிலவியல் உபகோட்டம் அலுவலகத்தில் உதவி இயக்குநர் (நிலவியல்) திரு. R. கமலக்கண்ணன் அவர்கள் நீர்வளத் துறை நிலவியல் உபகோட்டம் மூலமாக அரசால் கண்காணிக்கப்படும் வாட்டர் பிளாண்ட் நிறுவனத்தார்களிடமிருந்து அவர்களின் வாட்டர் பிளாண்ட்களை ஆய்வு செய்த பின்பு அவர் செய்த பணிக்காக கமிஷனாக லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவல் கிடைத்திருப்பதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்

திரு.P.M.ரமேஷ்பிரபு அவர்கள் தெரிவித்தார்கள். அதன்பேரில், அத்தகவலை எனது தகவலாளிகள் மூலம் விசாரித்து விட்டு, 15.05.2025 மதியம் சுமார் 12.30 மணிக்கு மதுரை ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு வந்து, பின்பு, நான் அழைத்ததின் பேரில், காவல் ஆய்வாளர்கள் ரமேஷ்பிரபு, திருமதி. சூரியகலா மற்றும் அவர்களது போலீஸ் பார்ட்டியினருடன் இணைந்து நேற்று (15.05.2025) மாலை 12.45 மணிக்கு புறப்பட்டு, சுமார் 12.50 மணி முதல், மதுரை தல்லாகுளம் ஹக்கீம் அஜ்மல் கான் ரோட்டில் அமைந்துள்ள நீர்வளத்துறை அலுவலக வளாகத்தினை தொடர்ந்து இரகசிய கண்காணிப்பு மேற்கொண்டதில் மேற்குறிப்பிட்ட அலுவலக வளாகத்தில் உள்ள கட்டத்தில் தரைத்தளத்தில் நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் நிலநீர் உபகோட்டம் அலுவலகமும், முதல் தளத்தில் நீர்வளத் துறை உதவி இயக்குநர் (நிலவியல்) நிலவியல் உபகோட்டம் அலுவலகமும் செயல்பட்டு வருவது தெரியவந்தது. மேற்படி கட்டத்தில் உள்ள முதல் தளத்தில் செயல்பட்டு வரும் அலுவலகத்திற்கு, அலுவலர்களும் வெளி நபர்களும் கையில் ஆவணங்கள் மற்றும் பையுடன் உள்ளே செல்வதும், வெளியே வருவதுமாக இருந்தார்கள். அதன்பேரில், 15.05.2025 ஆம் தேதி மதியம் சுமார் 14.05 மணிக்கு திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள மேற்படி உதவி இயக்குநர் (நிலவியல்) அலுவலகத்திற்கு சென்று, மேற்படி உதவி இயக்குநர் (நிலவியல்) அலுவலக அறையில் மேற்குபக்கம் போடப்பட்டிருந்த மேஜைக்கு முன்பாக கிழக்கு பார்த்து அமர்ந்து பணி செய்து கொண்டிருந்த அலுவலரிடம், அவருக்கு எதிரே அமர்ந்திருந்த நபரிடமும் நான் உடன் வந்திருந்த அனைவரையும் கூட்டிச் சென்று, என்னையும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திரு.ரமேஷ்பிரபு மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்து, மேற்படி உதவி இயக்குநர் (நிலவியல்) அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து தகவல் தெரிவித்த போது, அந்த நபர்கள் சற்று பதட்டத்துடன் தங்களது இருக்கையை விட்டு எழுந்து நின்று, மேற்படி உதவி இயக்குநர் (நிலவியல்) அலுவலக அறையில் மேற்குபக்கம் போடப்பட்டிருந்த மேஜைக்கு முன்பாக கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபர் தனது பெயர் திரு. கமலக்கண்ணன் என்றும், தான் உதவி இயக்குநர் (நிலவியல்) அலுவலகத்தில் கடந்த கடந்த 30.12.2024-ம் தேதி முதல் உதவி இயக்குநர் (நிலவியல்) ஆக பணிபுரிந்து வருவதாகவும், மேலும், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய உபகோட்டத்திற்கும் உதவி இயக்குநர் (நிலவியல்) ஆக கூடுதல் பொறுப்பு வகித்து வருவதாகவும், 15.05.2025-ம் தேதி காலை 11.15 மணி முதல் மதியம் 14.00 மணி வரை தங்களது அலுவலகத்திற்கு அருகில் கிழக்கு பக்கம் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தின் புதிய கட்டடத்திற்கு பின்புறத்தில் செயல்பட்டு வரும் கண்காணிப்பு பொறியாளர், நீர்வளத் துறை, Ground Water Circle, மதுரை அலுவலகத்தில் மேற்படி கண்காணிப்பு பொறியாளர் திரு.ஜோயல்சதீஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற "Dynamic Groundwat er Resources Assessment of Tamil Nadu as on March 2025" கூட்டத்திற்கு

சென்று வந்துவிட்டு, தற்போதுதான் இருக்கையில் அமர்ந்து பணி செய்வதாகவும், அலுவல் சம்பந்தமாக தன்னை சந்திக்க வந்த உதவி புவியியலாளர் திரு.ஞானகரன் உடன் பேசிக்கொண்டிருப்பதாக தெரிவித்து, மேற்படி அவரது அறையை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள சம்மதம் தெரிவித்தனர். அதன்பேரில், நான் மேற்படி திரு. கமலக்கண்ணன் அவர்களுக்கு அருகில் இருந்த Soldout என பொறிக்கப்பட்ட கருப்பு நிற லேப்டாப் பேக் பற்றி விசாரித்த போது, திரு.கமலக்கண்ணன் அந்த பை தனது பைதான் எனக்கூறி அதனை ஆஜர்படுத்தினார். மேற்படி லேப்டாப் பையை சோதனையிட்ட போது, அதில் ஆரஞ்சு நிற Poorvika என குறிக்கப்பட்ட பிளாஸ்டிக் பையிலிருந்து ஐந்து கவர்களை எடுத்து ஆஜர் செய்தார். அதில், Sri Lingam Aqua Farms முத்திரையிடப்பட்ட காக்கி கவரிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.500/- X 28 = ரூ.14,000/-, ரூ.200/- X 5 = ரூ.1,000/- என மொத்தம் ரூ.15,000/- இருந்தது. அப்பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் Sri Lingam Aqua Farm பெண் உரிமையாளர் தன்னை 13.05.2025-ம் தேதி திருநெல்வேலி உதவி இயக்குநர் உபகோட்ட அலுவலகத்தில் தரைதளத்தில் சந்தித்து கொடுத்தது எனக் கூறினார். மேலும், மற்றொரு காக்கி நிற கவரின் மீது BMS & Kumar என எழுதப்பட்ட கவரிலிருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் உள்ள பணவிவரங்களும் அவரால் கூற இயலவில்லை. அதில் ரூ.500/- X 60 = ரூ.30,000/- இருந்தது. அப்பணம் குறித்து கேட்ட போது, கன்னியாகுமரி உதவி நிலவியலாளர் (A.G) திருமதி. வீணா என்பவர் அலுவலக செலவிற்காக கொடுத்ததாக தெரிவித்தார். மேலும், மேற்படி கமலக்கண்ணன் அவர் வைத்திருந்த மூன்றாவது காக்கி நிற கவரிலிருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.500/- X 15 = ரூ.7,500/-, ரூ.200/- X 8 = ரூ.1,600/- மற்றும் ரூ.100/- X 50 = ரூ.5,000/- என மொத்தம் ரூ.14,100/- இருந்தது. அந்தப்பணம் குறித்து கேட்ட போது, தனது சொந்தப்பணம் என்று தெரிவித்தார். மேலும், அவர் தான் வைத்திருந்த நான்காவது கவரிலிருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.500/- X 28 = ரூ.14,000/- காணப்பட்டது. அந்தப்பணம் குறித்து கேட்ட போது, அதுவும் தனது சொந்தப்பணம் என்று தெரிவித்தார். மேலும், திரு. கமலக்கண்ணன் வசமிருந்த அவரது மணி பர்ஸில் வைத்திருந்த ரூ.500/- X 13 = ரூ.6,500/-, ரூ.100/- X 24 = ரூ.2,400/- ரூ.50/- X 1 = ரூ.50/-, ரூ.20/- X 5 = ரூ.100/-, ரூ.10/- X 1 = ரூ.10/- என மொத்தம் ரூ.9,060/- எடுத்து ஆஜர் செய்தார். அதற்கு சரியான முகாந்திரம் கூறவில்லை. ஆக மொத்தத்தில் அவரிடம் ரூ.82,160/- இருந்தது. மேலும், மேற்படி கமலக்கண்ணன் தனது சட்டைப்பையிலிருந்து ரூ.970/-யை எடுத்து என்னிடம் ஆஜர் செய்தார். அப்பணத்தை பற்றி மேற்படி கமலக்கண்ணனிடம் விசாரித்த போது, அது தனது சொந்த செலவிற்காக தான் வைத்துள்ள பணம் எனக்கூறியதால் அந்தப்பணம் அவரிடமே திரும்ப

கொடுக்கப்பட்டது. மேற்படி கமலக்கண்ணனிடம் பணம் ரூ.82,160/-யை குறித்து விசாரித்த போது, அந்தப்பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே சந்தேகத்தின் அடிப்படையில் அப்பணம் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி பணத்தை கமலகண்ணன் தான் வைத்திருக்க பயன்படுத்திய அவரது 1) Soldout என பொறிக்கப்பட்ட கருப்பு லேப்டாப் பேக், 2) ஆரஞ்சு நிற Poorvika என குறிக்கப்பட்ட பிளாஸ்டிக் பை, 3) Sri Lingam Aqua Farms முத்திரையிடப்பட்ட காக்கி நிற கவர், 4) BMS & Kumar என எழுதப்பட்ட காக்கி நிற கவர், 5) திரு.கமலகண்ணனால் பணம் வைக்கப்பட்டிருந்த மற்ற இரண்டு காக்கி நிற கவர்கள் ஆகியவைகள் என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.கமலக்கண்ணன் அவர்களிடம் கொடிநாள் பதிவேடு குறித்து கேட்டபோது அவர் 2025ம் ஆண்டிற்கு கொடிநாள் பணம் வசூல் செய்வதற்கு இதுநாள் வரை சுற்றறிக்கை வரவில்லை எனத் தெரிவித்தார். பின்னர், மேற்படி கமலக்கண்ணன் அவர்களின் இருக்கைக்கு எதிரே அமர்ந்திருந்த உதவி புவியியலாளர் திரு. ஞானகரன் அவர்களை விசாரித்த போது, தான் கமலக்கண்ணன் அவர்களின் கீழ் பணியாற்றி வருவதாக தெரிவித்தார். மேலும், அவர் தனது சட்டைப்பையிலிருந்து பணத்தை எடுத்து என்னிடம் ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்த்ததில் ரூ.3,200/- இருந்தது. அந்தப்பணம் பற்றி விசாரித்த போது, அவர் தகுந்த முகாந்திரம் கூறியதால் அப்பணம் ஞானகரனிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் மேற்படி அறையைவிட்டு வெளியே வந்தபோது, மேற்படி கமலக்கண்ணன் அறைக்கு வெளியே வடக்கு பக்கம் சுமார் 30 அடி தள்ளி தெற்கு திசையை நோக்கி மேற்படி கமலக்கண்ணனின் அறையை பார்த்தவாறு வராண்டாவில் நின்று கொண்டிருந்த Peacock Blue கலர் முழுக்கை சட்டை மற்றும் சந்தன கலர் பேண்ட் அணிந்திருந்த நபரிடம் என்னையும், காவல் ஆய்வாளர் திரு.ரமேஷ்பிரபு, திருமதி. சூரியகலா மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்த போது அவர் சற்று பதற்றமானார். பின்னர் அவரிடம் விசாரித்த போது, தனது பெயர் அருணாச்சலம் என்றும், தான் விருதுநகர் நிலவியல் உபகோட்டத்தில், உதவி நிலவியலாளராக கடந்த 03.06.2013-ம் தேதி முதல் பணிபுரிவதாகவும், 15.05.2025 ஆம் தேதி மதுரை கண்காணிப்பு பொறியாளர், நீர்வளத் துறை, Ground Water Circle அலுவலகத்தில் நடைபெற்ற "Dynamic Groundwater Resources Assessment of Tamil Nadu as on March 2025" கூட்டத்திற்கு வந்து கலந்து கொண்ட பின்னர், தங்களுக்கு கூடுதல் பொறுப்பு கவனித்து வரும் உதவி இயக்குநர் திரு. கமலக்கண்ணன் அவர்களை பார்த்துவிட்டு செல்ல வந்திருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் திரு.அருணாச்சலம் அவர்களை சோதனையிட்ட போது, அவர் தனது பேண்ட்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து மணிபர்ஸை எடுத்து அதிலிருந்து கத்தையாக பணத்தை எடுத்து, என்னிடம் ஆஜர்செய்தார். அந்தப்பணத்தை எண்ணிப்பார்த்த போது அதில்

ரூ.500/- X 40 = ரூ.20,000/- இருந்தது. அந்த பணம் குறித்து மேற்படி அருணாச்சலத்திடம் விசாரித்த போது, அவர் விருதுநகரை சேர்ந்த தனது நண்பர் திரு.கோட்டைமுருகேசன் என்பவர் 15 நாட்களுக்கு முன்பு தன்னிடம் கடனாக வாங்கிய ரூ.20,000/-த்தை 15.05.2025 ஆம் தேதி காலை தனது வீட்டில் வைத்து தன்னிடம் கொடுத்ததாக தெரிவித்தார். அதன்பேரில் அவரது நண்பர் திரு.கோட்டைமுருகேசன் அவர்களின் கைப்பேசி எண். 9[illegible]1-ஐ மேற்படி அருணாச்சலத்திடமிருந்து பெற்று அந்த எண்ணில் தொடர்புகொண்டு ரூ.20,000/- குறித்து திரு.கோட்டைமுருகேசனிடம் கேட்டபோது அவர் திரு.அருணாச்சலம் அவர்களிடம் தான் பணம் எதுவும் கடனாக பெறவும் இல்லை, 15.05.2025 ஆம் தேதி காலையில் கொடுக்கவும் இல்லை என தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் அவர் வைத்திருந்த பணம் ரூ.20,000/- சந்தேகத்தின் அடிப்படையில் என்னால் கைப்பற்றப்பட்டது. அவரிடம் வேறு ஏதாவது பணம் உள்ளதா என்று கேட்டபோது அவரது சட்டையின் இடது பக்க பாக்கெட்டிலிருந்து ரூ.300/-ஐ எடுத்து என்னிடம் ஒப்படைத்தார். அப்பணத்தை குறித்து அவரிடம் கேட்டபோது மேற்படி அருணாச்சலம் அது தனது சொந்த செலவிற்காக வைத்துள்ள பணம் எனக்கூறி தகுந்த முகாந்திரம் தெரிவித்ததால் அப்பணம் அவரிடம் என்னால் திரும்பி ஒப்படைக்கப்பட்டது. பிறகு, மேற்படி கமலக்கண்ணன் அலுவலக அறைக்கு அடுத்து தெற்கு பக்கம் உள்ள அறையை சோதனையிட சென்ற போது, அங்கு வடக்கு பக்கம் வைக்கப்பட்டிருந்த கணினி முன்பு அமர்ந்து பணிசெய்து கொண்டிருந்த பெண்மணியிடம் என்னையும், காவல் ஆய்வாளர் திரு.ரமேஷ்பிரபு, திருமதி. குரியகலா மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்து, சோதனை செய்வது குறித்து தெரிவித்த போது, அவர் இருக்கையிலிருந்து எழுந்து நின்றுகொண்டு எங்களிடம் தனது பெயர் செல்வி என்றும், தான் மேற்படி அலுவலகத்தில் Computer Operator ஆக கடந்த 01.06.2014-ம் தேதி முதல் ஒப்பந்த பணியாளராக பணிபுரிந்து பின்னர், கடந்த 06.12.2019-ம் தேதி முதல் தினக்கூலி பணியாளராக சேர்த்துக்கொள்ளப்பட்டு பணிபுரிந்து வருவதாகவும், தனக்கு அருகே உள்ள அறையில் உள்ள மேற்படி கமலக்கண்ணன் அவர்கள் தனது உயர் அதிகாரி என்றும், அவர் 15.05.2025 ஆம் தேதி காலை அலுவலகத்திற்கு வந்த பிறகு, சுமார் 11.00 மணிக்கு எங்களது உயர் அதிகாரியான கண்காணிப்பு பொறியாளர் நடத்திய கூட்டத்திற்கு சென்று விட்டு சிறிது நேரம் முன்புதான் வந்ததாக தகவல் தெரிவித்தார். அவரது அலுவலக அறை மற்றும், அவரது உடைமைகள் காவல் ஆய்வாளர் திருமதி. குரியகலா அவர்களின் உதவியுடன் சோதனையிடப்பட்டது. மேற்படி கமலக்கண்ணன் அறைக்கு எதிரே மேற்குபக்கம் கிழக்கு பார்த்தவாறு நுழைவு வாயில் கொண்ட அலுவலக அறை உள்ளே சென்ற போது, மேற்படி அறையில் தெற்கு பக்கம் கிழக்கு நோக்கி போடப்பட்டிருந்த மேஜை முன்பு இருக்கையில் அமர்ந்து பணிசெய்து கொண்டிருந்த பெண்மணியிடம் என்னையும், காவல் ஆய்வாளர்

திரு.ரமேஷ்பிரபு, திருமதி. சூரியகலா மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்து, சோதனை செய்வது குறித்து தெரிவித்த போது, அவர் இருக்கையிலிருந்து எழுந்து தனது பெயர் மீனா பார்வதி என்றும், தான் மேற்படி அலுவலகத்தில் உதவி நிலவியலாளராக கடந்த 18.05.2022-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும், தனது உயர் அதிகாரியான மேற்படி கமலக்கண்ணன் அவர்களுடன் சேர்ந்து 15.05.2025 ஆம் தேதி மதுரை கண்காணிப்பு பொறியாளர், நீர்வளத்துறை, Ground Water Circle அலுவலகத்தில் நடைபெற்ற "Dynamic Groundwater Resources Assessment of Tamil Nadu as on March 2025" கூட்டத்திற்கு வந்து கலந்து கொண்ட பின்னர் தற்போது அலுவல் செய்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், அவரது அறையில் உள்ள மற்ற அலுவலர்கள் சாப்பிட சென்றிருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், அவர் தனது மணிபர்ஸிலிருந்து ரூ.1,640/-யை எடுத்து ஆஜர் படுத்தி அதனை தான் சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தகவல் தெரிவித்து தகுந்த முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடம் என்னால் ஒப்படைக்கப்பட்டது. பிறகு அவரிடம் நேற்றைய தினம் (15.05.2025) கண்காணிப்பு பொறியாளரால் நடத்தப்பட்ட கூட்டம் சம்பந்தமான அறிவிப்பு கடிதம் குறித்து கேட்ட போது, அவர் தனது மேஜையின் மீது வைத்திருந்த Office of the Executive Engineer, WRD., Ground Water Division, Madurai - 2, Endt. Lr. No. 117 / AG / F.7(B)/2025/ Dt : 16.04.2025 (பக்கம் 1 முதல் 21 வரை) சுற்றறிக்கையை எடுத்து ஆஜர் செய்து அதில் நான்காம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள Send the Status Report on Fortnight basis -யை காண்பித்து இதற்காக 15.05.2025 ஆம் தேதி கூட்டம் நடத்தப்பட்டது என்ற விபரம் தெரிவித்தார். அந்த சுற்றறிக்கை என்னால் கைப்பற்றப்பட்டது. பின்பு, மேற்படி உதவி நிலவியலாளர் செல்வி. மீனா பார்வதி அவர்களிடம், மேற்படி அலுவலகத்தில் பணியில் உள்ள மேற்படி கமலக்கண்ணன் சம்பந்தமாக வருகை பதிவேட்டை பற்றி விசாரித்த போது, கமலக்கண்ணன் அவர்கள் கள அலுவலர் ஆவார் என்றும், மேலும், திருநெல்வேலி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்கு பொறுப்பு அதிகாரி ஆவார் என்றும், எனவே அவருக்கு மேற்படி அலுவலகத்தில் அவரது வருகை குறித்து பதிவு செய்வதற்காக வருகை பதிவேடு ஏதும் கிடையாது என தெரிவித்தார். அவரது அலுவல் செய்து கொண்டிருந்த அலுவலக அறை காவல் ஆய்வாளர் திருமதி.சூரியகலா அவர்களின் உதவியுடன் முழுமையாக சோதனையிடப்பட்டது. பின்னர் திடீர் இணை ஆய்வு சம்பந்தமாக மேற்படி அலுவலக அலுவலர்கள் திரு.கமலகண்ணன், திரு.ஞானகரன், திரு.அருணாச்சலம், திருமதி.செல்வி, செல்வி.மீனாபார்வதி ஆகியோரது எழுத்து மூலமான வாக்குமூலம் தனித்தனியாக என்னால் பெறப்பட்டது. மேலும், திடீர் இணை ஆய்வின் போது, மேற்படி கமலக்கண்ணனிடம் பணம் ரூ.82,160/- மும், திரு.அருணாச்சலத்திடமிருந்து பணம் ரூ.20,000/-மும் ஆக மொத்தம்

ரூ.1,02,160/- கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி பணத்தை கமலகண்ணன் தான் வைத்திருக்க பயன்படுத்திய அவரது 1) Soldout என பொறிக்கப்பட்ட கருப்பு லேப்டாப் பேக், 2) ஆரஞ்சு நிற Poorvika என குறிக்கப்பட்ட பிளாஸ்டிக் பை, 3) Sri Lingam Aqua Farms முத்திரையிடப்பட்ட காக்கி நிற கவர், 4) BMS & Kumar என எழுதப்பட்ட காக்கி நிற கவர், 5)திரு.கமலகண்ணனால் பணம் வைக்கப்பட்டிருந்த மற்ற இரண்டு காக்கி நிற கவர்களும், 6)Office of the Executive Engineer, WRD., Ground Water Division, Madurai - 2, Endt. Lr. No. 117 / AG / F.7(B)/2025/ Dt : 16.04.2025 (பக்கம் 1 முதல் 21 வரை) சுற்றறிக்கை ஆகியவைகள் என்னால் கைப்பற்றப்பட்டது. இச்சோதனையின் போது, நடந்த நிகழ்வுகள் செல்போன் மூலமாக வீடியோ பதிவு செய்யப்பட்டது. தகவலின் பேரில், சம்பவ இடத்திற்கு, பொறி. கா. அகிலா, செயற்பொறியாளர், நீர் வளத்துறை, நில நீர் கோட்டம், மதுரை அவர்கள் சுமார் 17.45 மணிக்கு ஆஜரானார். அவரிடம் திடீர் இணை ஆய்வு குறித்தும், கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணங்கள் குறித்து என்னால் தகவல் தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட 1) Soldout என பொறிக்கப்பட்ட கருப்பு லேப்டாப் பேக், 2) ஆரஞ்சு நிற Poorvika என குறிக்கப்பட்ட பிளாஸ்டிக் பை, 3) Sri Lingam Aqua Farms முத்திரையிடப்பட்ட காக்கி நிற கவர், 4) BMS & Kumar என எழுதப்பட்ட காக்கி நிற கவர், 5)திரு.கமலகண்ணனால் பணம் வைக்கப்பட்டிருந்த மற்ற இரண்டு காக்கி நிற கவர்களும், 6)Office of the Executive Engineer, WRD., Ground Water Division, Madurai - 2, Endt. Lr. No. 117 / AG / F.7(B)/2025/ Dt : 16.04.2025 (பக்கம் 1 முதல் 21 வரை) சுற்றறிக்கை, திரு.கமலகண்ணன், திரு.ஞானகரன், திரு.அருணாச்சலம், திருமதி.செல்வி, செல்வி.மீனாபார்வதி ஆகியோரின் எழுத்து மூலமான வாக்குமூலங்கள் மற்றும் மேற்படி திடீர் இணை ஆய்வின் போது உதவி இயக்குநர் திரு. கமலக்கண்ணன் மற்றும் திரு.அருணாச்சலம் ஆகியோர் வசமிருந்து கைப்பற்றப்பட்ட தொகை ரூ.1,02,160/- ஆகியவற்றை இணைத்து திரு. கமலக்கண்ணன் மற்றும் திரு.அருணாச்சலம் ஆகியோர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறு தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒம்/- XXXXX திரு.K.இப்ராஹிம் சேட் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1) மதுரை மாவட்டம், நீர்வளத் துறை, உதவி இயக்குநர் (நிலவியல்) அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை 15.05.2025 (14.05 மணி முதல் 20.00 மணி வரை) 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,02,160/-. 3) Soldout என பொறிக்கப்பட்ட கருப்பு லேப்டாப் பேக். 4) ஆரஞ்சு நிற Poorvika என குறிக்கப்பட்ட பிளாஸ்டிக் பை. 5) Sri Lingam Aqua Farms முத்திரையிடப்பட்ட காக்கி நிற கவர். 6) BMS & Kumar என எழுதப்பட்ட காக்கி நிற கவர். 7) திரு.கமலகண்ணனால் பணம் வைக்கப்பட்டிருந்த மற்ற இரண்டு காக்கி நிற கவர்கள்,

8) Office of the Executive Engineer, WRD., Ground Water Division, Madurai - 2, Endt. Lr. No. 117 / AG / F.7(B)/2025/ Dt : 16.04.2025 என்ற சுற்றிக்கை. 9) திரு.கமலகண்ணன், திரு.ஞானகரன், திரு.அருணாச்சலம், திருமதி.செல்வி மற்றும் செல்வி.மீனாபார்வதி ஆகியோரின் வாக்குமூலங்கள்.

Sir, received the report this day (16.05.2025) at 13.00 hrs along with Joint Surprise Check Proceedings, dated 15.05.2025, Cash Rs. 1,02,160/-, 5 Statements, seized document, Laptop bag, Orange Colour Poorvika plastic bag, Covers-4 (brown Colour). After obtaining permission from the Superior Officers, I registered a case in Madurai V&AC Crime No.08/2025 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 16.05.2025 at 14.00 hrs. Sd/- XXXXX 16/05/2025 (P.M. Ramesh Prabhu), Inspector of Police, V&AC, Madurai.

The original FIR along with report of Tr. K. Ibrahim Seit, Joint Surprise Check Proceedings Dated : 15.05.2025, 5 statements, seized document and Properties are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under Prevention of Corruption Act, Madurai and other copies were sent to the officers concerned.

16/05/25
Inspector of Police
Vigilance &
Anti-Corruption
Madurai